நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## CC. No. 468/2025

## P.W.6 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | ஜலபதி |
| தந்தை / கணவர் பெயர் | : | செல்வம் |
| கிராமம் | : | பழக்காரனூர் |
| வட்டம் | : | மேட்டூர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | PW6 |
| வயது | : | 26 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026–ஆம் வருடம், மார்ச் மாதம், 10–ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரிகள் ஆஜர். அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 12.00 PM

1. நான் தற்போது பழக்காரனூரில் குடியிருக்கிறேன். நான் 4 சக்கர வாகனம் ஓட்டி வருகிறேன். எதிரிகளுக்கும் புகார்தாரருக்கும் நிலம் சம்மந்தமாக பிரச்சனை இருந்து வந்தது எனக்கு தெரியும். சுமார் 4 வருடங்களுக்கு முன்பு புகார்தாரரை எதிரிகள் அடித்ததாக தெரிந்து கொண்டேன். இதுசம்மந்தமாக போலீசார்

சம்பவயிடத்திற்கு எப்போது வந்தார்கள் என்று எனக்கு நியாபகம் இல்லை. சண்டை நடந்த இடத்திற்கு வந்து படம் வரைந்து எழுதி என்னிடமும், வேல்மணிகண்ட பிரபாகர் என்பவரிடமும் கையெழுத்து வாங்கினார்கள்.

2. பிறகு அங்கிருந்த ஆட்டிற்கு சல்லை ஒடிக்கும் மூங்கில் சல்லை கத்தி ஒன்றை கைப்பற்றினார்கள். அதில் நானும் வேல்மணிகண்ட பிரபாகர் இருவரும் கையெழுத்து செய்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரிலுள்ள 1 வது கையெழுத்து என்னுடையதுதான். அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். (**பார்வை மகசர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. ) (மேற்படி காவல்துறை தரப்பில் தயார் செய்யப்பட்டதாக குறிப்பிடப்படும் கைப்பற்றுதல் மகசர் மற்றும் அந்த வழக்கு சொத்தை இந்நீதிமன்றத்தில் ஆஜர் செய்ததற்கான படிவம் 91 ஆகியவை இந்த வழக்கில் இறுதியறிக்கையுடன் இணைத்து தாக்கல் செய்யப்படவில்லை. அதனால் குறியீடு செய்யஇயலவில்லை.)** போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எனக்கு தமிழில் எழுதப்படிக்க தெரியும் என்றால் சரிதான். நான் கையொப்பம் செய்த பார்வை மகசரில் யார் யாரை தாக்கினார்கள் என்ற விவரம் எழுதியிருந்தது என்றால் சரிதான். அதைத்தவிர வேறு எதுவும் எழுதவில்லை என்றால் சரிதான். நான் படித்துபார்த்துதான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான்.

2. சம்பவயிடத்தில் இந்த தடியால்தான் அடித்ததாக மாரியப்பன் மகன் தங்கராஜ் என்பவர் எங்களிடம் சொன்னார். அதனடிப்படையில் போலீசாரிடம் அங்கு கிடந்த தடியை அடையாளம் காட்டினேன். அந்த தடியால்தான் அடித்தார்களா என்று எனக்கு நேரடியாக தெரியாது.

3. மொத்தம் இரண்டு கையெழுத்து போட்டோம். படம் வரைந்த தாளில் ஒரு கையொப்பமும், கைப்பற்றுதல் மகசரில் ஒரு கையொப்பமும் செய்தோம். வேறு எந்த கையெழுத்தும் நான் செய்யவில்லை. ஆஜர் எதிரிகள் எனக்கு பழக்கம் இல்லை. ஆனால் மாரியப்பன் வீட்டிற்கு வரப்போக எதிரிகளை எனக்கு தெரியும்.

தங்கராஜ் என்பவர் எனக்கு போன் செய்து சம்பவம் குறித்து சொன்னார். அதை பார்ப்பதற்காக நான் சம்பவயிடத்திற்கு போனேன்.

4. சம்பவம் நடந்து 4–5 நாட்கள் கழித்து நான் சம்பவயிடத்திற்கு சென்றேன். சம்பவயிடத்தில் இருந்து அந்த தடியை போலீசார் எடுத்துச்சென்றார்களா என்று எனக்கு தெரியாது. இந்த வழக்கிற்கும் ஆஜர் எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும் புகார்தாரர் என் உறவினர்கள் என்ற அடிப்படையில் அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:– 12.15 PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**

நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## CC. No. 468/2025

## P.W.7 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | மணி |
| தந்தை / கணவர் பெயர் | : | கந்தசாமி |
| கிராமம் | : | பெரியசோரகை |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW7** |
| வயது | : | 62 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026–ஆம் வருடம், மார்ச் மாதம், 10–ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரிகள் ஆஜர். அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 12.16 PM

1. நான் தற்போது பழக்காரனூரில் குடியிருக்கிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் 1 ம் எதிரி அம்மாசி எனது கொளுந்தனார் ஆவார். ஆஜர் 2 ம் எதிரி அய்யம்மாள் அவரது மனைவி ஆவார். அ.சா.1 மாரியப்பனும் எனது கொளுந்தனார் ஆவார். எங்களது தெருவில் இருந்த மின்சார கம்பத்தில் இருந்து

எங்கள் வீட்டிற்கு மின்இணைப்பு கொடுத்தார்கள். அதை என்னுடைய கொளுந்தனார் அம்மாசி மின்இணைப்பு இருந்த ஒயரை சல்லையை எடுத்து வந்து துண்டித்து விட்டார்.

2. அப்போது ஒயர்மேன் கம்பத்தின் மேலே இருந்தார். எதிரி அம்மாசி ஒயரை அறுப்பதை பார்த்துவிட்டு கீழேவந்துவிட்டார். அதன்பிறகு ஒயர்மேன் மின்சார அலுவலகத்திற்கு புகார் கொடுக்க சென்றார். எனது மகன் சுப்ரமணி, தங்கராஜ் இருவரும் சென்றார்கள். ரோட்டில் என்னுடை கொளுந்தனார் மாரியப்பன் சென்றபோது எதிரிகள் இருவரும் கொளுந்தனார் மாரியப்பனை சல்லையால் அடித்துவிட்டார்கள்.அதன்பிறகு மாரியப்பனை மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். போலீசார் என்னை 1 வாரம் கழித்து விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. சம்பவத்தின்போது நான் வீட்டில்தான் இருந்தேன். மாரியப்பன் மனைவி மகேஷ்வரி என்பவர் ஆஜர் எதிரிகள் மாரியப்பனை அடித்துவிட்டதாக தகவல் சொன்னார். நான் மருத்துவமனைக்கு அவரை அழைத்து செல்லவில்லை. மாரியப்பனை மருத்துவமனைக்கு அவரது மச்சான் ராஜ்குமார் அழைத்து சென்றார்.

2. ஆஜர் எதிரிகளுக்கும் எங்களுக்கும் பேச்சுவார்த்தை இல்லையென்றால் சரிதான். முன்விரோதம் உள்ளதென்றால் சரிதான். மாரியப்பன் குடும்பத்தார் எதிரிகள் சாலைக்கு நெருப்பு வைத்த விவரம் எனக்கு தெரியாது. இதைப்பற்றி விசாரிக்க போலீசார் வந்தது எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளுக்கும் இந்த சம்பவத்திற்கும் எந்த சம்பவமும் இல்லை என்றால் சரியல்ல. ஏற்கனவே உள்ள முன்விரோதத்தின் காரணமாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:- 12.15 PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை**

செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.

ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்
நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.